## மு.க.ஸ்டாலின் ஆட்சியில்தான் மீனவர்களுக்கென்றே தனியே மாநாடு நடத்தப்பட்டது!

# மீனவர்களின் பாதுகாப்புக்காக பல திட்டங்களை நிறைவேற்றியது கழக ஆட்சி!

## சட்டப்பேரவையில் முன்னாள் அமைச்சர் அனிதா இராதாகிருஷ்ணன் பேச்சு!

**சென்னை, செப்.6–**

**சட்டப்பேரவையில் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் முன்னாள் அமைச்சர் அனிதா இராதாகிருஷ்ணன் பேசுகையில் பொருளாதார பாதுகாப்பினை உறுதி செய்யும் விதமாக முத்தான பல சீரிய திட்டங்களை மீனவர்களுக்காக செயல்படுத்தியுள்ளது திராவிட மாடல் ஆட்சி என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் முன்னாள் அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் பேசியதாவது :–

பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் வழியில் நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய சமூக நீதிக் காவலர், சமத்துவப் பிதாமகன், எங்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்று, கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டை அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாக உருவாக்கியும், ஏழையெளிய மற்றும் விளிம்புநிலை மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும்வகையில் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்தியும், மாநிலங்களின் உரிமைகளை யாருக்கும் விட்டுக்கொடுக்காமல் தன்னாட்சிக் கொள்கையில் தலைவர் கலைஞர் அவர்களின் வழியில் தமிழையும், தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளையும் பாதுகாத்து இந்திய நாட்டிற்கே வழிகாட்டியாக முதலமைச்சருக்கெல்லாம் முதலமைச்சராக இருந்து தமிழ்நாட்டை முன்மாதிரி மாநிலமாக வழிநடத்தி வந்த எங்கள் தலைவர் மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எங்கள் தலைவர் தளபதி அவர்களுக்குத் துணையாக நின்று, அர்ப்பணிப்புடன் பணியாற்றிய எங்கள் இளைய தலைவர், இந்த அவையில் எங்களையெல்லாம் வழிநடத்திக் கொண்டிருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர் அன்பு சகோதரர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு எனது அன்பு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எங்கள் தலைவர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு தமிழ்நாட்டின் உரிமைக்காக நாடாளுமன்றத்தில் தொடர்ந்து குரல் கொடுத்துவரும் எங்கள் நாடாளுமன்றக் குழு உறுப்பினர் திருமதி கனிமொழி கருணாநிதி, எம்.பி. அவர்களுக்கும், என்னைத் தொடர்ந்து ஏழாவது முறையாக சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்து, இந்த அவைக்கு அனுப்பி வைத்த திரு ச்செந்தூர் சட்டமன்றத் தொகுதி மக்களுக்கும், எனது வெற்றிக்காக அயராது உழைத்த இயக்க சகோதரர்களுக்கும், தோழமைக் கட்சித் தோழர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், இந்த மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு அனுமதி வழங்கிய தங்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

### பாதாள சாக்கடைத் திட்டத்தை மறு சீரமைப்பு செய்க!

என்னுடைய தொகுதியாக இருக்கின்ற திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதியில், திருச்செந்தூர் நகராட்சியில் செயல்படுத்தப்பட்டுவரும் பாதாள சாக்கடை குழாய்கள் அளவில் சிறியதாக இருப்பதால், அடிக்கடி குழாய்களில் அடைப்பு ஏற்பட்டு, junction points வழியாக நிறைந்து கழிவுநீர் வெளியேறி சாலைகளில் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு தின ந்தோறும் வந்து செல்லும் பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகின்றனர். இதனால் நோய் பரவும் அபாயமும் உள்ளது.

எனவே, இன்றைய திருச்செந்தூர் மக்கள்தொகை மற்றும் திருக்கோயிலுக்கு தினந்தோறும் வந்து செல்லும் வெளியூர் பக்தர்களின் எண்ணிக்கையினைக் கருத்திற்கொண்டு, ஏற்கெனவே நிறைவேற்றி செயல்பட்டுவரும் பாதாள சாக்கடைத் திட்டத்தினை IIT மூலம் ஆய்வு செய்து, பாதாள சாக்கடைத் திட்டத்தினை மறுசீரமைப்பு செய்து மேம்படுத்த வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதி காயல்பட்டினம் நகராட்சியில் சுமார் 40 ஆயிரம் மக்கள் வசிக்கின்றனர். சுமார் 18 ஆயிரம் வீடுகள் உள்ளன. மக்கள்தொகையின் அடிப்படையில் தற்போது மொத்த வார்டுகளின் எண்ணிக்கை 18 ஆக உள்ளது. சிறுபான்மை சமூகத்தைச் சார்ந்த இஸ்லாமியப் பெருமக்கள் அதிகம் வசிக்கின்ற பகுதியாக உள்ளது. எனவே, உயர்ந்துவரும் மக்கள்தொகையின் அடிப்படையில் வார்டு எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டுமென்பது காயல்பட்டினம் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக உள்ளது. எனவே, அக்கோரிக்கையை நிறைவேற்றும்முகமாகவும், நகராட்சியில் நிர்வாக வசதிக்காகவும் வார்டு மறுவரையறை செய்யும் பணியை மேற்கொண்டு வார்டுகளின் எண்ணிக்கையை கணிசமாக அதிகப்படுத்த வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு எப்போதெல்லாம் ஆட்சிப் பொறுப்பேற்கின்றதோ, அப்போதெல்லாம் மீனவர்களுடைய சமூக, பொருளாதார பாதுகாப்பினை உறுதிசெய்யும் விதமாக முத்தான பல சீரிய திட்டங்களை மீனவர்களுக்காக செயல்படுத்தி வந்துள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். குறிப்பாக, சொல்லவேண்டுமானால், பிற்படுத்தப்பட்டோர் பட்டியிலிலிருந்த மீனவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்ற மீனவர்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் அவர்களைச் சேர்த்து மீனவர்களின் வாழ்வில் ஒளியேற்றியவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### மீனவர் நல வாரியம் அமைத்தவர் கலைஞர்!

தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பிரிவு மீனவர்களுடைய சமூக, பொருளாதார பாதுகாப்பினை உறுதிசெய்திடும்வகையில், 2007 ஆம் ஆண்டுதான் முதன்முதலில் மீனவர்களுக்கென 'மீனவர் நல வாரியம்' என்ற அமைப்பினை அன்றைய முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உருவாக்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்களின் வாழ்வாதாரம் மீன்பிடித் தடைக் காலத்தினால் பாதிக்கப்படுவதை அறிந்து, அவர்களுடைய துயரத்தைப் போக்கிட, 2008 ஆம் ஆண்டு மீனவ குடும்பங்களுக்கு மீன்பிடி தடைக் கால நிவாரணம் வழங்கும் திட்டத்தை முதன்முதலில் நாட்டிற்குத் தந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

மண்ணெண்ணெயினால் இயங்கக்கூடிய இயந்திரங்களைப் பயன்படுத்தும் நாட்டுப் படகுகளுக்கும், போதிய அளவில் மானிய விலையில் மண்ணெண்ணெய் வழங்க வேண்டுமென்ற மீனவர்களின் கோரிக்கையினை ஏற்று, 2010 ஆம் ஆண்டு, நாட்டுப் படகுகளுக்கு, லிட்டர் ஒன்றுக்கு 25 ரூபாய் என்ற மானிய விலையில் மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கும் திட்டத்தை அறிவித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். இன்றைக்கு நான் அந்த மண்ணெண்ணெயைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கடந்த காலத்தில், எங்கள் பகுதியில் இருக்கின்ற தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் பயன்படுத்துகின்ற அந்த engine-ல் மண்ணெண்ணெயைத் தான் பயன்படுத்தினார்கள். அவர்கள் மண்ணெண்ணெயைப் பயன்படுத்துகிறார்கள் என்று சொன்னால், அப்போது அந்த மண்ணெண்ணெயை அரசும் வழங்கவில்லை, தனியாரும் வழங்கவில்லை.

ஆகவே, அவர்கள் தொழில் செய்வதற்கு அன்றைக்குத் திண்டாடிய நிலையில், அதனால் ஏற்பட்ட இடைஞ்சல்கள் குறித்து, தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டது. அன்றைக்கு உணவுத் துறை அமைச்சராக இருந்த மரியாதைக்குரிய அண்ணன் எ.வ. வேலு அவர்களை உடனடியாக டெல்லிக்கு அனுப்பி, எந்த வகையிலாவது மானிய விலையில் மண்ணெண்ணெயைப் பெற்றுத் தர வேண்டும் என்று அன்றைக்கு முத்தமிழறிஞர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டார்கள். அண்ணன் எ.வ.வேலு அவர்களும் டெல்லிக்குச் சென்றார்கள். அன்றைக்கு ஒன்றிய அரசாங்கத்தின் அமைச்சர்களை எல்லாம் நாடி, மண்ணெண்ணெயை மானிய விலையில் தர வேண்டுமென்று கேட்டபோது, 'நாங்கள் மானிய விலையில் மண்ணெண்ணெயைத் தர மாட்டோம், ஆனால், company-களுக்குக் கொடுக்கக்கூடிய மண்ணெண்ணெயை மட்டும் நாங்கள் தருகின்றோம் என்று சொன்னார்கள்.

அப்போது நம்முடைய முத்தமிழறி



ஞர் தலைவர் கலைஞர் அவர்கள் 'மீனவர்கள் நம்முடைய சகோதரர்கள், மீனவர்கள் தொழில் செய்வதற்கு நாம் என்னென்ன உதவிகள் செய்ய வேண்டுமோ, அதையெல்லாம் செய்ய வேண்டும், எனவே நாமே அவர்களுக்கான நிவாரணங்களை வழங்கலாம்' என்று சொன்னார்கள். அந்த வகையில், எந்த காலத்திலும் லிட்டர் ஒன்றுக்கு 25 ரூபாய் என்ற விலையில்தான் மண்ணெண்ணெய் வழங்கப்பட வேண்டும் என்ற திட்டத்தைத் தந்த தலைவர் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு 25 ரூபாய்க்குக் கொடுக்கின்றோம் என்று சொன்னால், இன்றைக்கு வெளி market-ல் மண்ணெண்ணெயின் விலை 90 ரூபாய். ஆனால், இன்றும் 25 ரூபாய்க்குதான் அந்த மண்ணெண்ணெயை வழங்க வேண்டுமென்று ஆணைகளை வழங்கிய வகையில், மீனவர்கள் பாதுகாக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

### மீன்பிடித்துறைமுகம் அமைக்கப்பட்டது!

மீனவர்களுடைய எதிர்கால நலனைக் கருத்தில்கொண்டு, எங்கள் தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்தில்தான் 2008 ஆம் ஆண்டு, கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் பகுதியிலும், 2009 ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டம், தேங்காய்ப்பட்டினம் பகுதியிலும், 2010 ஆம் ஆண்டு நாகப்பட்டினத்திலும் மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்கப்பட்டு, மீனவர்களுடைய வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட்டது என்பதை பெருமையுடன் இந்த அவையில் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட நாயகர் அண்ணன் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், 'மீன்வளத் துறை' என்று இருந்த பெயரை, 'மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை' என்று மாற்றம் செய்தது என்பது மீனவர்களுடைய நலன்மீது எங்கள் தலைவர் கொண்ட அன்பிற்கும், அக்கறைக்கும் மிகச்சிறந்த எடுத்துக்காட்டாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 5 ஆண்டுக்கால ஆட்சியில், கன்னியாகுமரியிலிருந்து திருவள்ளூர் வரை, 14 மீனவக் கிராமங்களிலும் அனைத்து மீனவர்களின் மீன்பிடித் தொழிலைப் பாதுகாக்கும் வகையில், மீன்பிடி இறங்கு தளங்கள், மீன் வலை கூடங்கள், தூண்டில் வளைவுகள், அலைத் தடுப்புச் சுவர்கள், சிறு துறைமுகங்கள் உள்ளிட்ட அனைத்து மேம்பாட்டுப் பணிகளையும் ரூ.2,261 கோடி மதிப்பீட்டில், இதுவரை இல்லாத அளவிற்கு செய்துகாட்டியுள்ளோம் என்பதை இந்த அவையில் நான் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### மீனவர்களுக்குத்தான் மாநாடு!

இதுவரையில் எந்த முதலமைச்சரும் மீனவருக்கென்று அரசின் சார்பாக மாநாடு நடத்திய வரலாறே கிடையாது. ஆனால், கழகத்தினுடைய தலைவராக இருக்கின்ற மரியாதைக்குரிய அண்ணன் தளபதி அவர்கள், 2023-ல் இராமநாதபுரத்தில் மீனவர்களுக்கொன்று தனி மாநாட்டை நடத்தினார்கள். அந்த மாநாடு நடைபெற்றபோது, மீனவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியது மட்டுமல்லாமல், 10 அறிவிப்புகளையும் வெளியிட்டார்கள். அதில் ஒன்று, கடலோரம் வசிக்கின்ற மீனவர்களுக்கு அரசு மற்றும் தொண்டு நிறுவனங்கள்மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருந்தன. ஆனால், அவ்வாறு கட்டப்பட்ட வீடுகளில் பலவற்றுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டதா என்றால் இல்லை. இதனால் வீடுகளைப் பழுதுபார்க்கவும், வங்கிக் கடன் பெறவும் மீனவர்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டிருந்தனர்.

இன்றைக்கு குறிப்பாக சொல்ல வேண்டுமென்று சொன்னால், கடலோரப் பகுதியில் இருக்கின்ற மீனவர்களுக்கு தொண்டு நிறுவனங்கள் மற்றும் அரசின் சார்பாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருந்தது. வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருந்தது என்று சொன்னால், அது பழுதடைந்தால், பழுதுகூட பார்க்க முடியாது. அதை விரிவுபடுத்த வேண்டுமென்ற வகையில் அவர்கள் திட்டமிட்டார்கள் என்று சொன்னால்—bank-க்கும் போக முடியாது. என்ன காரணம் என்று சொன்னால், அவர்களுக்கு பட்டா இல்லாத நிலை இருந்தது. இந்த நிலைகளையெல்லாம் உடனடியாக மாற்ற வேண்டுமென்ற வகையில், அந்த மாநாடு நடைபெறுகின்றபோது, தமிழகத்தின் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சராக இருந்த எங்களுடைய முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், உடனடியாக அவர்களுக்கு பட்டா வழங்க வேண்டுமென்ற வகையில், பட்டா வழங்குவதற்காக ஒரு ஆணை வழங்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 8,561 வீடுகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு, அவர்களுடைய நீண்டகால கோரிக்கையை நிறைவேற்றித் தந்த அரசுதான் திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை நான் இங்கு எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன்.

மீனவர்கள் முன்பெல்லாம் நிவாரணத் தொகை பெற வேண்டும், எந்த சலுகைகளையும் பெற வேண்டுமென்றால், 60 வயதிற்குட்பட்டவர்கள்தான் அந்த பயனை அடைய வேண்டும் என்ற நிலை இருந்தது. ஆனால், அந்த மாநாட்டில் அன்றைக்கு மீனவர்கள் வைத்த பல்வேறு கோரிக்கைகளைக் கேட்டு, 60 வயது மட்டுமல்ல, மீனவர்கள் தொழில் எவ்வளவு நாட்கள் செய்கின்றார்களோ, எந்த வயது வரை செய்கின்றார்களோ அதுவரையிலும் அவர்கள் அந்தப் பயனை அடைய

## குளச்சல் - தேங்காய்பட்டணம் பகுதிகளில் மீன்பிடித் துறைமுகங்களை அமைத்தோம்!

வேண்டும் என்கிற வகையில், அதற்கான ஆணைகளை வழங்கியவர் யார் என்று சொன்னால் எங்களுடைய தலைவராக இருக்கின்ற மரியாதைக்குரிய அண்ணன் தளபதி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மீனவர்களுடைய நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, மீன்பிடி தடைக் கால நிவாரணத் தொகையை 5 ஆயிரம் ரூபாயிலிருந்து 8 ஆயிரம் ரூபாயாகவும், மீன்பிடி குறைவு கால நிவாரணத்தொகையை 5 ஆயிரம் ரூபாயிலிருந்து 6 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கியவர் எங்கள் தலைவர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

நீங்கள் உங்கள் தேர்தல் அறிக்கையில், மீன்பிடி தடைக்கால நிவாரணத்தை 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்குவோம் என்று அறிவித்தீர்கள். உங்களுடைய தேர்தல் அறிக்கையில், தடைக்கால நிவாரணத்தை 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்குவோம் என்று அறிவித்தீர்கள். ஆனால், இன்றைக்கு அறிவிப்பு வந்திருக்கின்றது, அறிவிப்பை பார்க்கின்றபோது, தடைக்கால நிவாரணத்தை, எங்கேயாவது 20 ஆயிரம் ரூபாயாக அறிவித்து இருக்கின்றோமா, நீங்கள் தேர்தல் அறிக்கையில் கொடுத்த அறிக்கையை, அறிவித்து இருக்கின்றோமா என்ற கேள்வியை நான் கேட்க கடமைப்பட்டிருக்கின்றேன். மீனவர்களுக்கு நீங்கள் அறிவித்த 20 ஆயிரம் ரூபாயை தடைக் காலபணமாக வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் சபையில் வைக்க கடமைப்பட்டிருக்கின்றேன்.

எங்கள் திராவிட மாடல் ஆட்சியில்தான், ஆயிரம் நாட்டுப் படகு மீனவர்களுக்கு 40 சதவிகிதம் மானியத்தில் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. 45 ஆயிரம் மீனவர்களுக்கு மீன்பிடித் தொழிலுக்காக கூட்டுறவு சங்கங்கள்மூலம் கடனுதவி வழங்கப்பட்டன. திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்ட நாட்டுப் படகு மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் ஆண்டுக்கு 3 ஆயிரத்து 400 லிட்டரிலிருந்து 3 ஆயிரத்து 700 லிட்டராக உயர்த்தி வழங்கப்பட்டது. விசைப் படகு மீனவர்களுக்கு மானிய விலையில் வழங்கப்படும் டீசல் ஆண்டுக்கு 19 ஆயிரம் லிட்டராக உயர்த்தி வழங்கப்பட்டது.

மாற்றுத் தலைவர் அவர்களே, கடலில் மீன் பிடிக்கும்போது காணாமல் போன மீனவர்களினுடைய குடும்பங்களின் நிலை எப்படி இருக்கும் என்பதை நினைத்துப் பார்க்கவே மனம் பதறுகிறது. அவர்களுடைய குடும்பம் மிக வறுமையிலும், துன்பத்திலும் ஆழ்ந்து கிடப்பதை அறிந்து, அவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை நாள் ஒன்றுக்கு, 250 ரூபாயிலிருந்து 350 ரூபாயாக உயர்த்தி வழங்கிய தலைவர் எங்களுடைய தலைவர் என்பதை நான் இங்கு சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன். அதுமட்டுமல்லாமல், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் இலங்கையில் பிடிபடுகின்றனர். இலங்கையில் பிடிபடுகின்ற மீனவர்களின் குடும்பத்திற்கு 350 ரூபாய் மட்டுமல்ல, 500 ரூபாய் வழங்க வேண்டுமென்கிற வகையில், ஆணை வழங்கியவரும் எங்களுடைய தலைவர்தான் என்பதை நான் இங்கு சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

இராமநாதபுரம் மாவட்டம், தங்கச்சிமடம் மீன் இறங்கு தளத்தை, மீன் பிடித் துறைமுகமாக தரம் உயர்த்தவும், குந்துகால் மீன் இறங்கு தளத்தை தூண்டில் வளைவாக மேம்படுத்தவும், பாம்பன் வடக்கு மீனவர் கிராமத்தில் தூண்டில் வளைவு அமைக்கவும் உத்தரவிட்ட அரசு, எங்கள் திராவிட மாடல் அரசு. மேலும், மீனவர் நல மாநாட்டில் மீனவப் பெண்கள் கடற்பாசி வளர்த்து, வருவாய் ஈட்டும் வகையில் பல்நோக்கு கடற்பாசி பூங்கா அமைக்க அறிவிக்கப்பட்டது.

மீனவர்கள் நல மாநாட்டில் புதிய திட்டங்களுக்காக மட்டுமல்ல, ரூ.926 கோடி ஒதுக்கீடு செய்து செயல்படுத்தியவர் எங்கள் அன்புத் தலைவர், எங்கள் தளபதி அவர்கள்தான்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தில் மீனவர் சமுதாய மாணவர்கள் படிப்பதற்கு கடந்த காலங்களில் 5 சதவிகிதம்தான் அவர்களுக்கான இட ஒதுக்கீடு வழங்கப்பட்டிருக்கிறது.

### இன்றைக்கு மீனவர்கள் பாதிப்பு!

இன்றைக்குக் குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், நம்முடைய மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்று சொன்னால் கடந்த காலங்களில் பாதிக்கப்பட்ட மீனவர்களைப் பாதுகாப்பதற்காக எங்களுடைய கழகத் தலைவர் அவர்கள் எவ்வளவு நாள் படகுகளெல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றனவோ அந்தப் படகுகளுக்கெல்லாம் நிவாரணம் வழங்குவதற்காக நிதிகளை வழங்கியவர் எங்களுடைய கழகத் தலைவர் அவர்கள்.

இலங்கையில், மீனவர்கள் 38 பேர் இன்றைக்கு இலங்கை கடற்படையினரால் அங்கு பிடிக்கப்பட்டிருக்கின்றனர்.

269 மீன்பிடி படகுகளும் இலங்கை கடற்படையினரால் அங்கே சிறை வைக்கப்பட்டிருக்கிறது. இது உங்களுடைய புள்ளிவிவரத்திலிருந்து பெறப்பட்டது. ஆனால், எங்களுடைய தலைவர், அந்தப் படகுகளையெல்லாம் மீட்பதற்கு ஒவ்வொரு படகுக்கும் ரூ.8 இலட்சம் வீதம் பணத்தை கொடுத்தார்கள். ஆனால், நீங்கள் அறிவித்திருப்பது என்னவென்று சொன்னால், இந்தப் படகுகளையெல்லாம் மீட்பதற்காக ரூ.1,86,00,000 வழங்க வேண்டுமென்கின்ற வகையில் இன்றைக்கு அறிவித்திருக்கின்றீர்கள் என்று சொன்னால், எத்தனை படகுகளை மீட்பதற்காக இந்தத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் எடுத்துச்சொல்ல வேண்டும்.

### 269 படகுகள் சிறைபிடிக்கப்பட்டுள்ளன!

இன்றைக்கு குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், 269 படகுகள் அங்கே சிறை வைக்கப்பட்டு மாட்டியிருக்கிறார்கள். சரி, இலங்கையிலிருந்து படகுகளை மீட்கப்படுவதற்குதான் வெளியுறவுத் துறை, பிரதமர் உள்ளிட்டோரை சந்திப்பது உள்ளிட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்; ஆனால், பக்கத்தில் இருக்கிற ஆந்திர பிரதேசத்திற்கு சமீபத்தில் சென்ற 7 படகுகள், சமீபத்தில் கூடலூர் சென்ற 8 படகுகள் அங்கே சிறை வைக்கப்பட்டிருக்கின்றது. கடந்த காலங்களில் அப்படி மீனவர்கள் செல்கின்றார்கள் என்று சொன்னால், அந்த… (மணியடிக்கப் பெற்றது)

8 படகுகள் அங்கே ஆந்திராவில் மாட்டியிருக்கிறார்கள் என்று சொன்னால், இந்தப் படகுகள் பிடிக்கப்பட்டு, ஏறக்குறைய 80 நாட்கள், 90 நாட்கள் ஆகிவிட்டன. ஆனால், இங்கேயிருக்கின்ற ஆந்திர பிரதேசத்தில் இருக்கிற படகுகளை மீட்பதற்கே, இந்த அரசால் முடியவில்லையென்று சொன்னால், இன்றைக்கு மாண்புமிகு ஆந்திர பிரதேசத்தின் முதலமைச்சர் அவர்கள் சமீபத்தில்தான் மகாபலிபுரம் வந்தார்கள். அவரிடம் சொல்லியாவது அதனை சரி செய்திருக்கலாம். ஆனால், இங்கேயிருக்கிற அதிகாரிகளோ யாரும்--கடந்த காலங்களிலெல்லாம் மீனவர்கள் செல்வார்கள்; பேசுவார்கள்; boats வந்துவிடும். ஆனால், அந்தப் படகுகளெல்லாம் வராமல், இன்றைக்கு மீனவர்களெல்லாம் தவிக்கின்ற தவிப்பு, சாதாரண தவிப்பல்ல. ஏறக்குறைய 90 நாட்களுக்கு மேல் ஆகிவிட்டது. இன்றைக்கு இந்த அரசு எடுத்த நடவடிக்கை குறித்து தெரிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். இந்தப் படகுகளையெல்லாம் மீட்டுத் தர வேண்டுமென்று வேண்டுகோளை வைக்க கடமைப்பட்டிருக்கின்றோம்.

இன்றைக்கு பல்வேறு வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கின்றீர்கள். 100 நாட்கள் ஆகியிருக்கின்றது. பல்வேறு வாக்குறுதிகள் என்று சொன்னாலும், அந்த வாக்குறுதிகளையெல்லாம் நீங்கள் நிறைவேற்றித் தந்து, மீனவர்களையும், விவசாய பெருமக்களையும் காக்கின்ற பணிகளை நீங்கள் செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து, நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

### தொகுதி கோரிக்கைகள்:

திருச்செந்தூர் தொகுதி, காயல்பட்டிணம் நகராட்சியின் அனைத்து பகுதிகளிலும் மழைநீர் வடிகால் அமைத்துத் தர வேண்டும்.

திருச்செந்தூர் தொகுதி, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு வெளி வட்ட சாலை அமைத்துத் தர வேண்டும்.

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் தொகுதி, கடற்கரை கிராமங்களான வீரபாண்டியப்பட்டினம், மணப்பாடு பகுதிகளில் மீனவர்கள் எளிதில் படகுகளை கடலுக்குள் கொண்டு செல்வதற்கும், கரை திரும்புவதற்கும் வசதியாக மணல் திட்டுகளை அகற்றப்பட வேண்டும்.

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் தொகுதி, உடன்குடி ஊராட்சிக்குட்பட்ட குலசேகரன்பட்டினம் ஊராட்சியை பேரூராட்சியாக தரம் உயர்த்தித் தர வேண்டும்.

திருச்செந்தூர் தொகுதி, காயல்பட்டிணம் நகராட்சி பகுதியில் ஒரு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியை அமைத்துத் தர வேண்டும்.

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் தொகுதி, ஆறுமுகநேரி பேரூராட்சியின் 18 வார்டுகளையும் ஒரே வருவாய் கிராமத்தின் கீழ் செயல்பட வேண்டும்.

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் தொகுதிக்குட்பட்ட நாசரேத் பேரூராட்சியில் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை அல்லது டைடல் பார்க் அமைத்துத் தர வேண்டும்.

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் தொகுதியில், உடன்குடியில் அரசு தொழில் நுட்ப கல்லூரி அமைத்துத் தர வேண்டும்.

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் தொகுதி, நரிகுளம், மனச்சிகுளம், அய்யனார் குளம், ஊரணி, செட்டியாபத்து, வடக்குளம், சிரிகுளம், குண்டன்கரை போன்ற குளங்களும் நிரப்ப சடையநேரி உபரி நீரை பயன்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

தூத்துக்குடி மாவட்டத்திற்குரிய தாமிரபரணி ஆறு தண்ணீரை உரிய காலத்தில் திறந்திட வழிவகை செய்திட வேண்டும்.

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் தொகுதி, காயல்பட்டிணம் நகராட்சி பகுதியில் குடியிருப்புகளுக்கு பட்டா வழங்கிட வேண்டும்.

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் தேசிய நெடுஞ்சாலை வீரபாண்டிய பட்டிணத்தில் அரசு தொழில் நுட்ப கல்லூரி வளாகத்தில் நவீன விளையாட்டு மைதானம் (மினி ஸ்டேடியம்) அமைத்துத் தர வேண்டும்.

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் தேசிய நெடுஞ்சாலை வீரபாண்டியபட்டிணம் அரசு தொழில் நுட்ப கல்லூரி வளாகத்தில் தேசிய நெடுஞ்சாலையின் முகப்பு பகுதியில் தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு இணையம் சார்பில் மீனவர்களுக்கு மானிய டீசல் வழங்க நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் அனிதா இராதாகிருஷ்ணன் பேசினார்.